30/9/1951 M.V.M BANGALORE 2
M

போர்வாள்

வாள் 5 வீச்சு 4

29-9-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
கா. இளஞ்செழியன் B A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

காஞ்சியில் திராவிட நாடு பிரிவினை விழா

கழகக் காளைகள் முழக்கம்



செப்டம்பர் 17 முதல் 23-ம் நாள் வரை உள்ள ஒரு வார காலம், "திராவிடநாடு பிரிவினை விழா" திராவிடத்தின் இக்கெட்டிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டிருக்கிறது. பிரிவோம் தனிநாடமைப்போம் என்கிற முழக்கம் எங்கெங்கும் எழுப்பப்பட்டிருக்கிறது. பிரிவினைவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடிய வகையிலே, காஞ்சீபுரம், இந்த ஆண்டு முதற் பரிசைத் தட்டிப் பறித்துக்கொண்டுவிட்டது. பொதுக் கூட்டம்—ஊர்வலம்—கொடியேற்றுவிழா எல்லாமே பிரமாதமான அளவில்! படங்கள் 1. அண்ணா அவர்கள் கொடியேற்றும் காட்சி. 2. ஊர்வல மக்களில் ஒரு பகுதி. 3. சைகில் ஊர்வலக் காட்சி.

ஜனநாயகத்தின் பெயரில் சர்வாதிகார நாடகம்

கோமாளிக் கோட்டமாகிறது காங்கிரஸ் கட்சி

எதிர்கால ஆபத்தின் தற்கால அறிகுறி.

'காம்ரேட்'

புதிய தலைவர் வந்திருக்கிறார்; போக்கிலே புதுமை இருக்கும்; வாழ்விலே மாற்றம் தெரியும் என்றெல்லாம் எண்ணிக்கொள்வது மனித இயல்பு. இது போலவே, 'நான் தலைவரானால் மலையைத் தூக்கி எறிவேன்; வானத்தை வில்லாய் வளைப்பேன்; மணலைக் கயிறாய்த் திரிப்பேன்; கடல் நீரை வறறச் செய்வேன்; இவ்வளவையும் நிறைவேற்ற எனக்கு ஆற்றல் இருக்கிறது, அறிவுஇருக்கிறது ஆனால் அதற்கான அதிகாரம்தான் இல்லை. எனவே, என்பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாத நிலைக்கு நான் உயர்த்தப் படவேண்டும். நான் கட்டளை இடுபவனாகவும் மற்றவர்கள் கீழ்ப்படிந்து நடப்பவர்களாகவும் அதிகாரம் தரும் அந்தஸ்து எனக்குத் தேவை—நான் தலைவனாக வேண்டும் மற்றவர்கள் மந்தைகளாக வேண்டும். இதுவே எனது விருப்பம். இப்புது நிலை எனக்கு ஏற்பட்டால் தான், என்னால் மேற்கூறிய அற்புதங்கள் அனைத்தையும் அரை விநாடியில் செய்து முடிக்க முடியும்' என்று அதிகார ஆசை கொண்டோர், தம் உள்ளத்தில் மறைக்கிடப்பதை மறைத்து, பொது நலத்தை முன் தள்ளி, ஆசை வார்த்தைகளை அடுக்கடுக்காக அள்ளி வீசுவர் அளவு கடந்து.

இப்படிப் பேசுவோரைப் பிடித்துக் கொண்டு இருப்பது அதிகார ஆசைதான். அதிகார ஆசை பரிகரிக்கமுடியாத பெரு நோய். சத்திர சிகிச்சையாலும் சரி மணிமந்திர ஔஷதத்தாலும் சரி தீர்க்கமுடியாத நோய்.

இவ்வதிகார ஆசை என்னும் பெருநோய் இந்தியப் பிரதமர் ஜவகர் அவர்களை எந்த அளவுக்கு விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு இருக்கிறது என்பதற்கு, சில காலமாக அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளே போதிய எடுத்துக் காட்டுகளாகும்.

காங்கிரஸ் மகாசபையின் தலைவர் பதவிக்குத்தேர்தல்நடைபெற்ற பொழுதே, புருஷோத்துமதாஸ் தாண்டன், தேர்தலில் வெற்றி பெறாமல் இருப்பதற்கு, ஜவகர், மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் முயன்றார். ஆனால் காலஞ்சென்ற வல்லபாய் படேலின் செல்வாக்கிற்கு முன் ஜவகரின் செல்வாக்குச் செல்லவில்லை, அவருடைய முயற்சி படுதோல்வி கண்டது, படேலின் பரிபூரண கடாட்சத்தால் தாண்டன் தலைவரானார், அதுமுதலே ஜவகர் ஒவ்வொரு கட்டத்திலும் தாண்டனுக்கு எதிராக அடம் பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார். அதாவது காங்கிரஸ் மகாசபையின் கட்டளைக்குக் கீழ்படிந்து நடக்க ஜவகர் ஒப்பவில்லை. காங்கிரஸ் கட்டளைகளைப் புறக்கணித்து நடப்பதிலேயே ஜவகர் ஆர்வம் காட்டினார்.

காங்கிரசை ஜவகர் அவமதித்து நடந்துகொண்டதற்கு கித்வாய் படலம் சிகரம் போன்றதாகும். காங்கிரஸ் மகாசபையின் தலைவர் தாண்டன்; இந்திய யூனியன் சர்க்காரின் பிரதமர் ஜவகர். காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவணங்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர் ஜவகர். காங்கிரசின் அபிலாஷை தலைவரின் மூலமாகத்தான் நிறைவேற்றப்படும். காங்கிரசின் அடிப்படைக்கோட்பாடுகளுக்கு—அப்படி ஏதாவது இருந்தால—எதிராக, அதன் தலைவர் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளைக்காங்கிரஸ்பெயர் கூறி வெளிக்காட்ட முடியாது. காங்கிரசின் கோட்பாடுகளை நிறைவேற்றுவதுதான் அதன் தலைவரின் கடமையேயன்றி, அவைகளுக்கு மாறாகத் தன் மனம் போன போக்கின்படி நடந்து கொள்வதல்ல தலைவரின் பணி. எந்த ஒரு ஸ்தாபனத்தின் தலைவருக்கும் அவர் ஒரு தனி மனிதர் என்கிற கண்ணோட்டத்தில்பார்க்கும்போது அவருக்குத் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ளும் உரிமை உண்டு, ஆனால் அந்த உரிமை ஒரு ஸ்தாபனத்தின் தலைவராக அவர் இருக்கிறவரையில் இருக்க முடியாது—கூடாது.

தாண்டன், தனித்த முறையில் சனாதனப் பாதுகாவலர்!

விஞ்ஞான வைரி; பத்தாம்பசலி; பிற்போக்காளர். எல்லாம் சரி. அவர் ஒரு காங்கிரஸ்காரர். காங்கிரசின் பணியோ தேசவிடு தலைக்காகப் போரிட்ட ஓர் 'மகத்தான' ஸ்தாபனம். முற்போக்கான கோட்பாடுகளைக்கொண்ட 'சிறந்த' ஸ்தாபனம் காங்கிரஸ் என்று பேசிக்கொள்ளப்பட்டது — பேசிக்கொள்ளப்படுகிறது. ஒரு பிற்போக்காளரான புருஷோத்தமதாஸ் தாண்டன், முற்போக்கான ஸ்தாபனம் என்று பிரசாரம் செய்யப்பட்டு வரும் காங்கிரஸ் சபைக்குத் தலைவராக்கப்பட்டார். அவர் தலைவராக்கப்பட்டாரே யன்றி தானாகத் தலைவராகவில்லை.

வல்லபாயால் 'காங்கிரஸ் தலைவராக நீவிர் இருக்க' என்று ஆணை இடப்பட்டதும், புருஷோத்தமதாஸ் தாண்டன் தலைவராகிவிடவில்லை. தற்காலம் நம் கண்முன் நடைபெற்று வரும் ஜனநாயகத்தேர்தல் நாடகப்படி அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் தாண்டன்.

தாண்டன், இந்து மத வெறியர், இந்தி ஏகாதிபத்தியப் பிரியர், புதுமைக்குப் பகைவர் என்பதை வல்லபாய் பட்டேலும் அறிவார். அவரை வாக்களித்துத் தலைவராக்கிய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களும் அறிவர். இத்தகைய ஒருவர், முற்போக்கு ஸ்தாபனமான காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக நிறுத்தப்படலாமா என்று வல்லபாயும் சிந்திக்கவில்லை, தாண்டனைத் தலைவராக்கிய உறுப்பினர்களும் நினைத்துப் பார்க்கவில்லை.

காங்கிரசுக்கு அடிப்படை லட்சியங்கள் என்று ஏதாவது இருப்பதாக இருந்தால் அவைகளுக்கும், தாண்டனின் சொந்தக் கொள்கைகளுக்கும் எந்தவித முரண்பாடும் கிடையாது என்பதுதான் உண்மையாகும்.

பாலோடுதான் நீர்சேரும்; நெய்யோடு ஒன்றுபடாது.

சிவன் கோயிலில் பட்டாச்சாரிக்குப் பணி கொடுக்க மாட்டார்கள். பெருமாள் கோயிலில், குருக்களைக் கொலுவிருக்கச் செய்யமாட்டார்கள்.

ஜீயருக்கு சங்கார் மடத்தில் தலைமைப் பதவிகிடைக்காது. சங்கரரால் தர்மபுர ஆதீன அந்தஸ்த்து பெறமுடியாது.

ஆனால் காங்கிரசோ, மகத்தானதோர் தேசிய ஸ்தாபனம் —முற்போக்கான கோட்பாடுகளைக் கொண்டது என்று கூறப்பட்டு வரும் ஸ்தாபனம்— இருந்தாலும் ஒரு மத வெறியர் அதன் தலைவராக்கப் படுகிறார். அதுவும் காங்கிரஸ்' ஸ்தாபனத்தின் உறுப்பினர்களின் பேராதரவு பெற்று.

வெற்றி பெற்றவரோ மத வெறியர்; போட்டியிட்டுத் தோற்றவரோ மத வெறியர் என்ற குற்றச் சாட்டிற்கு இலக்காகாதவர். மதவெறியருக்கு வெற்றி —அது இல்லாதவருக்குத் தோல்வி! தாண்டனுக்கு வெற்றி — கிருபலானிக்குத் தோல்வி!

வல்லபாய் பட்டேலின் துணை தாண்டனுக்கு இருந்தது —ஜவகரின் ஆதரவு கிருபலானிக்குக் கிடைத்தது. தாண்டன் வெற்றியின் மூலம் பட்டேல் வெற்றி பெற்றார்; கிருபலானியின் தோல்வி மூலம் ஜவகர் தோல்வியுற்றார்.

பட்டேலின் பலத்தால் தாண்டன் தலைவரானதால், பட்டேல் மறைந்ததும்தாண்டன்தலைமைப் பதவிக்கும் தலைவலி ஏற்பட்டு விட்டது. தாண்டன் தலைமைப் பீடத்தை விட்டு விலகவேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்.

ஜவகர் தலைவரானார்—இல்லை —சர்வாதிகாரியானார்!

தாண்டன் பிற்போக்காளர்; காங்கிரஸ் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் மனப்பூர்வமாக ஒத்துழைக்க முன்வராதவர் என்றபொருளில், அவர்பெயரை வெளியில் சொல்லாமல் காங்கிரஸ் மகாசபையின் மீதே பொதப்படையாகக் குற்றஞ் சாட்டினார் ஜவகர். குறிப்பிட்ட இந்த விஷயங்களில் காங்கிரஸ், தான் செய்த தீர்மானங்களை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவராமல் இருந்துவிட்டது என்று விளக்கமான குற்றச் சாட்டுகளைத் தெளிவான முறையில் கூறவில்லை ஜவகர், பொதப்படையாகவே பழி சுமத்திக் கொண்டு இருந்தார் ஜவகர்.

எந்தத் தாண்டனை, அவர் உள்ளம் இன்ன நிலையில் உள்ளதுதான் என்று நன்குதெரிந்து கொண்ட பிறகே ஆதரித்தார்களோ, அதேகாங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் ஜவகரை ஆரவாரம் செய்து ஆதரித்து காங்கிரஸ் மகாசபையின் தலைவராக ஆக்கி இருக்கிறார்கள்.

சில திங்களுக்கு முன் இந்து மத வெறியும், இந்தி ஏகாதிபத்தியப் பிரேமையும், புதுமைக்குவெறுப்பும், தங்களுக்கு ஏற்புடைய கொள்கைகள்தான என்றுதாண்டனைத்தேர்ந்தெடுத்ததின் மூலம் காட்டிக்கொண்டவர்கள்தான், இன்று, 'அதிதீவிர' முற்போக்காளர் என்று சொல்லப்படும் ஜவகரைத்தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். பல நாள் கொண்டிருந்த கோட்பாடுகளை அடிக்கடி மாற்றிக் கொள்வது என்பது எவராலும் இலகுவில் முடியக்கூடியது அன்று. ஆனால் காங்கிரஸ் உறுப்பினர்களால் அது சாத்தியமாகிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரத உபத்திரவம்

(காஞ்சி. கல்யாணசுந்தரன்)

உண்ணா விரதம் ஓர் அரசியல் நோயாகப் போய் விட்டது. காலஞ் சென்ற காந்தியார் என்றையதினம், உண்ணா நோன்பை ஓர் அரசியல் ஆயுதமாகக் கையாளத் தொடங்கினாரோ, அன்று முதலே அதற்கு ஓர் தனித்த சக்தி இருக்கிறது என்ற தவறான எண்ணம் இத்துணைக் கண்டத்து மக்களிடம் உருவாகி விட்டது.

தன்னுடைய உண்ணா நோன்புக்கோ காந்தியார், ஆயிரம் விதமான தத்துவார்த்தங்கள் கூறினார். உண்ணா நோன்புக்கு இயற்கையில் எவ்வித சக்தியும் கிடையாது. உண்ணா விரதத்தில் ஈடுபடுபவர்களின் தனிச் செல்வாக்கையும், அவர்களுக்கு அளிக்கப்படும் பிரசார அளவையும் பொறுத்துத் தான் இருக்கிறது உண்ணா விரதம் வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும்.

வழிப்பறிக்காரன், அவ்வழி வருவோர் போவோர்களைக் கழியையும் கத்தியையும் காட்டி மிரட்டி, அணி மணிகளை அவர்களாக முன்வந்து தன்னிடம் ஒப்படைக்க நிர்ப்பந்திக்கிறானே, அதற்கும், ஏதாவது ஒரு கொள்கை வெற்றிக்காக ஒருவர் உண்ணா விரதம் ஏற்று, உயிர் விடத் துணிவதாகப் பசப்பி, மற்றவர்களுக்கு மன வேதனையை மூட்டி, மாறுபட்டவர்களுக்கு வேறு மாற்றமே இல்லாமல் மண்டியிடச் செய்வதற்கும் எந்தவித வேற்றுமையும் கிடையாது.

வழிப்பறிக்காரன் அடித்தும் இம்சித்தும் தனது தேவையைப் பெறுகிறான். களவாணியிடம் இருந்து தப்புவதற்கு மார்க்கமில்லாத கட்டத்தில், தங்களுடைய பொருட்களை இழக்கத் தயாராகிறார்கள் அகதிகள்.

போக்கிரி, அவனிடம் சிக்கியவர்களின் தேகத்திலும் புண்ணை உண்டாக்குகிறான்; உள்ளங்களிலும் பீதியைத் தூவுகிறான். அச்சத்தால் அவன் விருப்பத்துக்கு இணங்குகிறார்கள் அபலைகள்.

உண்ணாவிரதம் இருப்பவனும், ஏககாலத்தில் ஆயிரம் தேள் கொட்டினால் எந்தவித வேதனை இருக்குமோ, அந்த அளவு வேதனையை, மாறுபட்டவர்களின் உள்ளங்களில், தனது உண்ணா விரதத்தின் மூலம் உண்டாக்கி விடுகிறான். உண்ணா விரதம் இருப்பவனின் ஆற்றலை மிகைப்படுத்தியும், அவன் இறந்து விட்டால் அதனால் ஏற்படும் பின் விளைவுகளை அதிகப்படியாகச் சித்தரித்தும் உண்ணா விரதம் இருப்பவனின் கோஷ்டி பித்தலாட்டப் பிரசாரத்தில் இறங்கிவிடுகிறது. இந்தப் பொய்ப் பிரசாரம் எந்த அளவு விரிவடைகிறதோ அந்த அளவிற்கு மற்றவர்களின் அச்சமும் பெருகுகிறது. அவன் இறப்பதால் ஏற்படும் பின் விளைவுகளை எண்ணி, மாறுபட்டவர்களும் உண்ணாவிரதியின் கோரிக்கைக்கு இணங்க முற்படுகின்றனர்.

உண்ணாவிரதி, பட்டினி இருந்து தன்னுயிரை இழக்கத் தயாராக இருப்பதாகக் கூறிக் கொள்வது வெறும் பயமுறுத்தல்; வீண் மிரட்டல். தனது பக்கம் நியாயம் இல்லாத நிலையில் தான், தனது கோரிக்கையில் நேர்மை இல்லாத நேரத்தில்தான் இறக்கும் வரையில் பட்டினி கிடப்பது என்ற சூதாட்டத்தில் இறங்குகிறார்கள் சூதுமதிபடைத்தோர்.

உண்ணா விரதிகள், வழிப்பறிக்காரர்களிலும் கொடியவர்கள். சமுதாய எதிரிகள். நல்லதோர் சமுதாயம் ஏற்படாமல் இருக்கப் பார்த்துக்கொள்ளும் பச்சோந்திகள.

இவர்கள் கொலையினும் கொடியவர்கள். சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களுடைய பெயர்களைப் பட்டோபமாக விளம்பரப்படுத்திக் கொண்டு இருப்பது பத்திரிகைத் தொழிலுக்கே இழுக்கு.

சிறைச்சாலையிலே உண்ணா விரதம் இருக்கிறார்கள், ஏதோ தங்களுக்குள்ள குறைபாடுகளைக் களைந்து கொள்வதற்காகக் கைதிகள். ஆனால் சிறை விதிப்படி அவர்களுக்குப் பலாத்காரமாக உணவு ஊட்டப்படுகிறது சிறை அதிகாரிகளால். அதே போலத் தான், ஏதாவது ஒன்றின் பெயர் கூறிக்கொழுத்துப்போய் உண்ணா விரதம் இருப்பவர்களுக்கும் சர்க்கார் பலவந்தமாக உண

பெங்களூரில் போர்வாள் விற்பனையாளர்

காலிகா நியூஸ் ஏஜண்ட்
ரஸ்ஸல் மார்க்கெட் எதிரில்
பெங்களூர் தண்டு

பெங்களூர் தண்டிலும், சிட்டியிலும் உள்ள எல்லா நியூஸ் ஏஜண்டுகளிடமும் 'போர்வாள்' விற்பனைக்குக் கிடைக்கும்.

நிர்வாகி.

வளிக்க முன்வர வேண்டும். உண்ணா விரதத்தை ஒரு கிரிமினல் குற்றமாக ஆக்கிக் கொடுந் தண்டனை அளிக்க முன்வர வேண்டும் சர்க்கார்.

'அயோக்கியர்களின் இறுதிப் புகலிடம் அரசியல்' என்று ஜான்சன் கூறியது போல, உண்ணா நோன்பையும் அதனை மேற்கொள்ளுகிறவர்களையும் அந்தப் பட்டியில்தான் சேர்க்க வேண்டும்.

காந்தியார் விட்டுப்போன ஆபத்தான அரசியல் நடவடிக்கைகளில் இந்த உண்ணா நோன்பும் ஒன்று. ஆசிரியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சீடகோடிகளும் நடந்து கொள்ள முற்படுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

* * *

சீதாராம சாஸ்திரி என்ற ஓர் ஆந்திரப் பார்ப்பனர், ஆந்திர மாகாணம் உடனடியாக வேண்டும் என்றும், அதுவும் சென்னையைத் தலைநகராகக் கொண்டு ஆந்திரம் அமையவேண்டும் என்றும், அவ்வாறு ஏற்பாடு உருவாகும் வரையில் உண்ணா நோன்பு இருப்பது என்றும் தீர்மானித்து உண்ணாவிரதம் ஏற்றார். அவருடைய உண்ணாவிரதத்தையும், அவர் முன்னாள் செய்ததாகச் சொல்லப்படும் நாட்டுத் தொண்டையும், பிரசார பீரங்கிகள் விரிவான முறையில் விளம்பரப்படுத்தின. ஆந்திர அரசியல் சூதாடிகள் சாஸ்திரியின் பட்டினிப் படலத்தை விளக்கி நாடு நகரெங்கும் சத்கதா காலட்சேபம் செய்தனர். டெல்லி தேவதைகளின் கருத்தும் கண்ணும் சாஸ்திரி பக்கம் திரும்பியது. காந்தீயத்தின் சிதைந்து சீரழிந்து போன சிறு நடமாடும் உருவாக இருக்கும் வினோபாபாவே என்ற அரசியல் விசித்திரமும் சாஸ்திரியின் சாவைத்தடுக்க முனைந்தது. என்னமோ முடிவாக சாஸ்திரியார் சாப்பிடுவது என்ற முடிவிற்கு வந்து விட்டார்.

நாட்டில், தினம் தினம், நாம் பார்க்கிறோம், படிக்கிறோம், பட்டினியால் மக்கள் சாவதையும், கொலைஞர்களாவதையும் போதிய உணவு இல்லாததால் எதிர்காலப் பிரஜைகளான குழந்தை குட்டிகள் தேவாங்கு போன்ற உருவெடுத்துவருவதையும்! கண்டிக்கவோ, விளம்பரப்படுத்தவோ, அனுதாபமாக நான்கு வார்த்தை கூறவோ ஏடும் காணோம் எழுத்தும் காணோம்—எக்காளம் இடும் அரசியல் சதிகாரர்களையும் காணோம். ஆனால் யாரோ ஒரு சாஸ்திரி பட்டினி கிடந்து சாகப் போகிறாராம்; அதற்கு வான் முட்ட எழுந்திருக்கிறது அழுகுரல்!

சாஸ்திரியாருக்கு உள்ள பசியோ, சோளக் கஞ்சி, கேழ்வரகு களி, கோங்கூரா தொக்குடன்கூடிய சம்பஞ்சம்பா சோறு எதனாலும் தீராமல் போய், தமிழர்க்குச் சொந்தமான சென்னையை விழுங்கினால் தீரும் என்ற போக்கில் இருக்கிறது. நாளை ஒரு ஆந்திர கேசரி, 'மதுரையில் திருமலைநாய்க்கர் ஆண்டு இருக்கிறார். அவர் ஒரு ஆந்திரர். எனவே மதுரையும் ஆந்திர மாகாணத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். இது சித்தியாகும்வரையில் இதோ பாருங்கள் பட்டினி இருந்து தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன்' என்று ஆர்ப்பாட்டம் செய்யக் கிளம்பினாலும் கிளம்பக்கூடும்!

* * *

சிலநாளைக்கு முன்பு, சாது சுப்பிரமணியம் என்ற காங்கிரஸ் தொண்டர் உண்ணா நோன்பு இருக்கத் துவங்கினார். தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருக்கும் காமராஜர் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்ளுகிறார் என்றும், அவருடைய நிர்வாகத்தில் 'அரசியல் ஒழுங்கீனம்' தலைவிரித்து ஆடுகிறது என்றும், இவைகளை விசாரித்து நீதி வழங்கவேண்டும் என்றும், நீதி கிடைக்கும்வரையில் பட்டினி இருந்து சாகப் போவதாகவும் விருதுநகர் சாது விளம்பரப்படுத்தப்பட்டார். 'பிரபல' காங்கிரஸ் தலைவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி சாது சாப்பிடுவதென முடிவிற்கு வந்து, சாப்பிட்டும் வருகிறார்.

(12-ம் பக்கம் பார்க்க)

திருச்சி தி. மு. கழக நிதிக்காக
9—10—51 செவ்வாய் திருச்சி தேவர் மன்றத்தில்
இரவு 10 மணிக்கு
அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்
மு. கருணாநிதி பங்கேற்கும் நாடகம்
வாழ முடியாதவர்கள்
கதை, வசனம்: மு. கருணாநிதி
கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1, (பெண்கள் 0-8-0)

காட்கில் கொடுத்த கசையடி!

"எந்த மொழியில் பேசப் போகிறீர்கள்?"

"ஆங்கிலத்தில்!"

"ஆங்கிலத்திலா!"

"ஆமாம்! ஆங்கிலத்தில்தான்! ஏன்? எதற்காக ஆச்சரியப்படுகிறீர்கள்?"

"ஆங்கிலத்தில் பேசினால் நன்றாயிருக்குமா?"

"நன்றாயிருக்குமோ இல்லையோ, ஆங்கிலத்தில் பேசினால்தான், நான் பேசுவது என்ன என்பது இங்குள்ள எல்லோருக்கும் புரியும். ஏன்? நீங்கள் எந்த மொழியில் நான் பேச வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள்?"

"இந்தியில்!"

"இந்தியிலா? நான் மாட்டேன்! முடியவே முடியாது!"

"தயவு செய்து நீங்கள் இந்தியில்தான் பேசவேண்டும்!"

"முடியாது என்றால் முடியாதுதான். ஒருக்காலும் முடியாது!"

"அப்படிச் சொன்னால் நன்றாயிராது. நீங்கள் இந்தியில் பேசினால்தான் நம் எல்லோருக்கும் கவுரவம். சரி அப்படியே பேசுகிறேன் என்று சொல்லுங்கள் ஒரு வார்த்தை."

"மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொண்டிருக்க என்னால் முடியாது, நான் இந்தியில் பேசமாட்டேன்—ஆங்கிலத்தில்தான் பேசுவேன்—இது என் முடிந்த முடிவு."

* * *

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் திராவிடர் இயக்க முன்னணி வீரர்—கட்டாய இந்தியைத் தென்னாட்டைவிட்டு விரட்ட அரும்பணி புரிந்தவர். ஆனால் அதே, சமயத்தில், இந்தி மொழியிற் சிறந்த புலமை படைத்தவர்—'விஷாரத்' என்ற இந்திப் பட்டம் வாங்கியவர்—அவர் எங்கேயாவது தேசிய வாதிகளின் கூட்டத்தில் பேச வேண்டி ஏற்பட்டிருக்கும்—அப்போது மேலே குறிப்பிட்டபடி அவருக்கும் ஏனைய தேசியவாதிகளுக்குமிடையே உரையாடல் நிகழ்ந்திருக்கும் என்று வாசகர்கள் எண்ணக்கூடும். ஆனால் உண்மை அதுவல்ல.

மேலே தரப்பட்டுள்ள உரையாடல், திராவிடர் இயக்கத் தோழர் ஒருவருக்கும் காங்கிரஸ் சார்புடைய நண்பர்களுக்குமிடையே நடைபெற்ற ஒன்று அல்ல.

இந்தியிலே பேசமுடியாது—ஆங்கிலத்தில்தான் பேசுவேன் என்று அழுத்தந் திருத்தமாக அதிகாரத் தொணியில் கூறியவரும் காங்கிரஸ்காரர்தான். ஆங்கிலத்திலே பேசவேண்டாம் தயவுசெய்து இந்தியிலே பேசிடுங்கள் என்று கொஞ்சிக் குழைந்து கும்பிட்டுக் கேட்டுக்கொண்டவர்களும் காங்கிரஸ்காரர்கள் தான்.

ஆச்சரியமாக இருக்கிறதே என்பீர்கள். ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

ஆனால், ஆச்சரியம், இந்த அளவோடு நின்றுவிடவில்லை. இன்னமும் இருக்கிறது!

"ஆங்கிலத்தில் தான் பேசுவேன்—இந்தியிலே முடியாது" என்று திட்டவட்டமாகக்கூறிய திடநெஞ்சு படைத்தவர், சாதாரண காங்கிரஸ் உறுப்பினரல்ல, முக்கியமான ஒரு காங்கிரஸ் தலைவர்.

முக்கியமான காங்கிரஸ் தலைவர் மட்டுமல்ல—பொறுப்புள்ள ஓர் அமைச்சர்.

அதிலும், மாகாண ஆட்சியின் அமைச்சரல்ல—மத்திய சர்க்காரில், அமைச்சர்!

தென்னாட்டிலிருந்து சென்றவரல்ல—வடநாட்டிலே பிறந்தவர்!

பெயர், காட்கில்! பதவியோ, தொழிற்சாலைகள்—உற்பத்தி விநியோகம் ஆகிய மூன்று துறைகளுக்கு அமைச்சராக இருப்பது!

அமைச்சர் காட்கில், ஆகஸ்டு 25ம் நாளன்று, பம்பாய் நகரத்தில், அந்த நகர காங்கிரஸ் ஊழியர்களின் கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார்.

அப்படிப் பேசியபோதுதான், அந்த ஊழியர்கள் இந்தியிலே பேசும்படி அவரை வற்புறுத்தியிருக்கின்றனர். அவரோ, அதுதான் முடியாது என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டு அவசர அவசரமாக ஆங்கிலத்தில் பேசியிருக்கிறார்.

"நீங்கள் ஓர் காங்கிரஸ் அமைச்சராக இருந்துகொண்டு இப்படிச் செய்வது முறையா, ஒழுங்கா, நியாயமா, இது தகுமா?" என்றெல்லாம் காங்கிரஸ் ஊழியர்கள் அவரைக் கேட்டிருக்கிறார்கள்போல் இருக்கிறது. எனவேதான் அவர், "நான் ஓர் அமைச்சன் — பொறுப்புள்ளவன்—ஆகவேதான் ஆங்கிலத்தில் பேசுகிறேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

"இந்தியில் பேசுவது ஆபத்தானது. நான் இந்தியில் பேசினால் என் சொற்கள் தப்புந்தவறுமாகப் பத்திரிகைகளில் வெளிப்படும். நான் அகில இந்திய ஆட்சிப்பீடத்தின் அமைச்சன் என்ற காரணத்தால் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டிய கடமை எனக்கிருக்கிறது. எனவே என் சொற்கள் தப்புந்தவறுமாக வெளிவராமல் இருக்கவேண்டுமானால் நான் இந்தியில் பேசக்கூடாது—ஆங்கிலத்தில் பேசவேண்டும்."

அமைச்சர் காட்கில் இந்திப் பித்தர்களுக்குத் தந்துள்ள கருத்துமிக்க கசையடி இது.

காட்கில் கருத்துரையைக் கூர்ந்து கவனித்தால், பொதுக் கூட்டங்களிலே பேசுவதற்குத் தகுதியற்ற மொழி இந்தி என்பது தெளிவாகத் தெரியவரும்.

பொதுக்கூட்டங்களிலே இந்திமொழியில் பேசக்கூடாது—பேசினால் பேசப்படும் சொற்களை ஆளுக்கொரு வகையாக அர்த்தப்படுத்திக்கொள்வார்கள்—நான் ஒரு கருத்திலே ஒரு வாக்கியத்தைக் கூறுவேன—அதே வாக்கியத்தை அதற்கு நேர்மாறான கருத்திலே பத்திரிகையாளர்கள் புரிந்து கொள்ளக் கூடும்—இந்தி அந்த அளவுக்கு வளமும் தெளிவும் அற்றமொழி—இலக்கண வரம்புகள் திட்டவட்டமாக அமையாத மொழி—ஒரே வாக்கியத்திற்கு ஒன்பது பொருளை அளிக்கக்கூடிய குழப்ப மொழி—ஆகவேதான் கூறுகிறேன், அந்தமொழியில் நான் பேசமாட்டேன்—என்று இவ்வளவு தெளிவாகக் கூறவில்லை காட்கில்—கூறமுடியுமா—அமைச்சராக அல்லவா இருக்கிறார் அவர்—அமைச்சராக இருக்கும்போது அவர் எப்படி உண்மையை அவ்வளவு வெளிப்படையாகக் கூறிட முடி

(16-பக்கம் பார்க்க)

செந்தமிழர் உண்பதற்குரிய செங்கரும்புகள்!

மா. இளஞ்செழியன் B. A. (Hons) இயற்றியவை

இந்திய அரசியல் திட்டம் ரூ. 2 0

காங்கிரஸ் ஆளவந்தார்கள் தீட்டித் தந்துள்ள அரசியல் திட்டத்தின் பிற்போக்குத் தன்மையைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டும் புதிய புத்தகம். அரசியல் திட்டம் என்றால் என்ன? ஒரு ஜனநாயக நாட்டில் அதற்குத் தரப்படவேண்டிய சிறப்பிடம் யாது? தற்கால அரசியல் உலகில் அதற்கு இவ்வளவு முக்கியத்துவம் தரப்படுவது ஏன்? என்னென்ன பண்புகள் அமைந்திருந்தால் ஓர் அரசியல் திட்டம் சிறந்த திட்டம் என்று கொள்ளப்படும்? இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள திட்டத்தில் அந்தப் பண்புகள் யாவும் அமைந்துள்ளனவா? அமையவில்லை என்றால் அப்படி அமையாததால் ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை? இந்தப் பிரச்சினைகள் யாவும் இந்தப் புத்தகத்தில் அலசி ஆராயப்பட்டிருக்கின்றன. 216 பக்கங்கள்.

தமிழன் தொடுத்த போர் ரூ. 1 12

தாளமுத்து, நடராசன் என்னும் இரண்டு மரணப் படுக்கைகளையும் தாண்டிக் கொண்டு வெற்றி பெற்றான் தமிழன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில்! அந்த வீரப் போராட்டத்தின் முழு வரலாறு, இந்த ஏடு. உள்ளத்தை உணர்ச்சி வெள்ளமாக்கும் நிகழ்ச்சிகள்—ஏராளமான படங்கள்—தலைவர்கள் பற்றிய விளக்கங்கள்-அறிஞர் அண்ணாவின் முன்னுரை யாவும் நிறைந்து மிகக் குறைந்த விலை. 240-பக்கங்கள். "தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்" என்று மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறார் அண்ணா.

சரிந்த சாம்ராஜ்யம் ரூ. 0 10

திக்கெட்டும் புகழ்க்கொடி நாட்டி வரும் "சந்திரமோகன்" நாடகம் வெறும் கற்பனை அல்ல-உண்மை வரலாறு என்பதை மறுக்க முடியாத சரித்திர ஆதாரங்களுடன் எடுத்து விளக்கும் ஏடு. மாவீரர்கள் கட்டிக் காத்த மராட்டிய மண்டலத்தை ஆரிய சூழ்ச்சி அழித்தொழித்த வேதனையின் வரலாறு, இந் நூல்.

அறிஞர் அண்ணாதுரை ரூ. 0 8

ஆயிரமாயிரம் வாலிபர்களின் இருதய கீதமாக விளங்கும் அறிஞர் அண்ணாவின் சென்ற 17 ஆண்டுப் பொது வாழ்வை எழில்படச் சித்தரிக்கும் இனிய சுவடி. அழகிய இரண்டாம் பதிப்பு.

திராவிடஸ்தான் வேண்டாமா ரூ. 0 8

வேண்டாம் என்று கூறுவோரின் போலிவாதங்களைத் தவிடுபொடியாக்கும் சம்மட்டிபோன்ற ஏடு.

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத்தெரு, :: சென்னை—1.

போர்வாள்

சென்னை 29—9—51 சனிக்கிழமை

தாயும்—சேயும்?

ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க அந்தத் தாய் பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்சமா நஞ்சமா?

கருத்தரித்தாள் என்ற உணர்வு ஏற்பட்டதும் அவள் உள்ளம் பூரித்து அன்றோ போய் இருக்கும்? அதனை உள்ளும் பொழுதெல்லாம் அவள் உடலும் உள்ளமும் இறும்பூதெய்தி இருக்குமே!

தாய் என்ற பெரும்பேற்றைப் பெற ஒவ்வொரு பெண்மணியும் எவ்வளவு பாடுபடுகிறாள்? கற்பென்னும் பூஷணத்தையும் அன்றோ காணிக்கையாகத் தரவும் துணிகின்றனர் தாயென்ற உயரிய நிலையைப்பெற?

'பிள்ளையைப் பெற்றிருந்தாலன்றோ தெரியும் பிள்ளையின் பெருமை' என்றும் 'பிள்ளையைப் பெறாத மலடி' என்றும் பிறர் பேசும் தூற்றலைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கண்ணீர் விட்டுக் கருத்தழியும் காரிகைகளும் உண்டே!

ஆம்! தாய் என்ற சொல்லும், தாய் என்ற நிலையும் சிறந்தவை என்பதில் ஐயமில்லை.

ஒரு பெண் கரு உறுகிறாள். அவள் மகிழ்கிறாள். பிறர் தன்னிலையைத் தன் காதுபட எடுத்துக் கூறும்போது அவள் இருதயம் விரிகிறது. விழிகள் களிப்பை உமிழ்கின்றன.

தன் புது நிலையைக் கணவனிடத்தில் அறிவிக்க வேண்டும் என்று எண்ணும்பொழுதே, அவள் முகம் என்றுமில்லாத புதுத் தெளிவுடன் அன்றோ விளங்குகிறது? பெண்களுக்குள்ள பல நாள் பழக்கப் பண்புப்படி நாணிக்கோணி தன் நிலையை விளக்கிவிட்டு, கணவனின் அகமகிழ்ச்சியை அவன் முகத்தில் காண்பதற்கு, அவள் விழிகளில் வழிந்தோடிவரும் ஆவலை எப்படி எழுதிக் காட்ட முடியும்?

தன் இல்லக்கிழத்தியின் இன்ப நிலை தெரிந்து அவனும் மகிழ அவளும் அதில்மூழ்கி எழ எதனாலும் நீக்க முடியாத் துன்பமும் மறைந்து, இருவரும் இன்ப உலகத்தில் அன்றோ குடிபுகுகிறார்கள் அரை விநாடியாவது!

பத்துத்திங்கள் சென்றபின் குழந்தையைப் பெற்றதும் பெற்ற தாய் எவ்வளவு எச்சரிக்கையாக நடந்து கொள்ளுகிறார்கள்? எவ்வளவு பத்தியம் இருக்கிறார்கள்? வாயைக் கட்டுகிறாள் வயிற்றைக் கட்டுகிறாள்; குழந்தைக்குப் பிணி ஏதும் அணுகாமல் பாதுகாக்கிறாள்!

தாய், பிறர் புகழைத்தேடித் தரும் சொல்மட்டுமன்று, புதிய பொறுப்புகளை வலுவில் புகுத்தும் வன்மைமிக்க சொல்லுமாகும். சொந்த சுக துக்கங்களைத் தியாகம் செய்யத் தூண்டும் சக்தியும் அச்சொல்லில் அடங்கியுள்ளது!

வறுமை—இல்லாமை, இந்த உயர்ந்த தாய்மையையும் சாகடித்து விடுகிறது. பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்ற மூதுரைக்குத் தாய்மையும் கட்டுப்பட வேண்டியதாகவே இருக்கிறது.

இதோ, ஆக்கிராவில் வேபனபல்லி என்ற சிற்றூர்ப் பகுதியில் ஒருதாய், வறுமையின் தாக்குதலால், தனது ஆறு மாதக் குழந்தையைக் காப்பாற்ற முடியாமல், ஒருவர் வீட்டிலே விட்டுவிட்டு மறைந்துவிட்டாள்.

அவள் பிச்சை எடுத்து இருக்கிறாள் குழந்தைக்காகவும் தனக்காகவும். பஞ்சம்மிகுந்தநாட்டில் ஒருத்தி எவ்வளவு காலத்துக்குத் தான் பிச்சை எடுத்துத் தன்னையும் காப்பாற்றிக் கொண்டு குழந்தையையும் காப்பாற்ற முடியும்? குழந்தையை விட்டுப் பிரிந்து செல்லுகிறாள்! கொடுமை!

பெற்ற குழந்தையை விட்டுப் பிரிவதற்குஓர் தாய்க்கு எவ்வளவு நெஞ்சத் துணிவு இருக்கவேண்டும்? அவளுடைய இருதயம் ஓரே நாளிலா இரும்பாகப் போய்விட்டு இருக்கும்? தினம் தினம் சிறுகச் சிறுகவன்றோ அவள் உள்ளம் உருக்கு இரும்பாக மாறி வந்து இருக்கும்?

பெற்ற குழந்தையை விட்டுப் பிரிந்து செல்வது நாகரிகமல்ல. கொடும்புலியும் தனது குட்டிகளைப் பிரிய ஒப்புவதில்லை என்றால், ஒரு தாய் ஆறுமாதக்குழந்தையை விட்டுப் பிரிவதென்பது, வறுமையின் வன்மையை எடுத்துக் காட்டக்கூடியதன்றோ?

அவனுக்கு நிகழ்காலத்திலும் நம்பிக்கையற்றுப் போய்விட்டது. எதிர் காலத்திலும் அவனுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. குழந்தையைப் பிரிந்து மறைகிறாள். வனவிலங்குகளிடத்திலும் காணமுடியாத கொடுமை! வேதனை தரும் வரலாறு!

இதனைக் காட்டுமிராண்டித்தனமான செயல் என்பதா? இது அநாகரிகமானது என்பதா? இச்செயலுக்கு—தாய், சேயைப் பிரிந்துவிடத் துணியும் தகாச் செயலுக்கு என்ன பெயர் சூட்டுவது?

தாய் என்ற பெயருக்கே நிலையான இகழைத் தேடிக்கொடுக்கும் தகாத நடத்தையில் ஈடுபட எது காரணமாக இருந்தது? வறுமை! வறுமைப் பிணியை அவள் மீது ஏவிவிட்டது எவர்? இல்லாமைப் படுகுழியில் அவளை வீழ்த்தியது எவர்? அவளிடத்திலிருந்த மனிதப் பண்பைப் பறிமுதல் செய்துவிட்ட மகாபுருஷர்கள் எவர்? நாட்டு மக்கள் அனைவரும் பசியாமல், பட்டினியால் சாகாமல், பிச்சைத் தொழில் ஏற்காமல், நல்ல நிலையில் வாழப்பார்த்துக் கொள்வதன்றோ ஒரு சர்க்காரின் கடமை? இந்தக் கடமையை ஒரு சர்க்கார் உணராமல் நடந்து கொள்ளுமானால், இந்த சர்க்காரை நாகரீக சர்க்கார் என்றோ, நாகரீகமான மக்களால் நடத்தப் பெறும் சர்க்கார் என்றோ அறிவிலியும் கூறுவனோ?

'அரிசி தின்பவர்கள் அநாகரிகமானவர்கள்' என்று நாத்தழும் பேறி நவின்ற தலை வீக்கம் கொண்ட முன்ஷியின் 'நாகரிகமான' ஆட்சியில்தான், தாய், பெற்ற சேயையே விட்டு விட்டுப் பிரிந்து செல்லும் 'நாகரிகம்', 'நல்ல நிலை' இருக்கிறது!

தாயைக் காணாது தவிக்கும் சிசு கூறுமே, அதற்கு ஆற்றல் இருந்தால், முன்ஷியின் 'நாகரிகம்' எந்த நிலையில் உள்ளது என்பதை!

தன்னை விட்டுச் செல்ல தன் தாயை மறைமுகமாகத் தூண்டிய 'நாகரிக'ச் சீமான்கள் யார் என்பதை, அக்குழந்தைச் சுட்டிக்காட்டுமே, அதற்கு நல்ல அறிவு இருந்தால்!

முன்ஷிக்கு 'நாகரிகம்' என்ற சொல்லுக்குப் பொருளே தெரியாது. பொய் பேசுவது நாகரிக வாழ்வின் பாற்பட்டது அல்லவா.

பர்மாவிலே ஏராளமான அரிசி இருக்கிறது ஏற்றுமதி செய்ய என்று பர்மிய சர்க்காரின் தூதுவர் கூறி, முன்ஷியின் முன்னாள் கூற்றை, அதாவது பர்மாவில் ஒருமணி அரிசியும் கிடையாது என்ற முன்ஷியின் பொய்யை அம்பலப்படுத்தினாரே, அது கேட்டு இன்னமும் முன்ஷி தற்கொலை செய்துகொள்ளவில்லையானாலும், உணவு மந்திரிப் பதவியையாவது உதறித்தள்ளிவிட்டு வெளியேறி இருக்கலாமே! ஒட்டிக்கொண்டு இருக்கிறாரே இன்னமும் அட்டையைப்போல் பதவியில் முன்ஷி!

ஆணவத்தைத் தவிர அவரிடத்தில் வேறு என்ன இருக்கிறது? நாத்துடுக்காகப் பேசுவதைத் தவிர முன்ஷியால் வேறு எதைத்தான் சாதிக்கமுடியும்?

அவருடைய உணவுக்கொள்கை சுயதேவைப் பூர்த்தியில் இருந்துத் தொடங்கி, மரமாகி, புல்லாகி, புளியங்கொட்டையாகி, பருத்திக் கொட்டையாகி, தேனீ வளர்ப்பாகி, அதிக மீன் உண்ணுங்கள் என்ற அறிவுரையாகி, அரிசி உண்பவர்கள் அநாகரீகமானவர்கள்' என்ற கட்டம்வரையில் வந்து தொடர்கதையாக இருக்கிறது. இத்தொடர் கதை முடிவதற்கு இன்னும் நான்கு தினங்கள் இருக்கின்றன, இந்த நான்கு தினங்களுக்குள் இன்னும் எவ்வளவு எவ்வளவு அரும்பெரும் திட்டங்களையும், வாய்க்கொழுப்பான வசவுகளையும் பரிசாகத் தரக் காத்துக் கொண்டு இருக்கிறாரோ மண்டைகனத்துப்போயுள்ள முன்ஷி!

அவர் அடுத்த தேர்தலுக்கு நிற்கப்போவதில்லையாம். இந்துமதக் கலாசார ஆராய்ச்சியில் ஈடுபட்டு, தான் கண்ட உண்மைகளை நாட்டுக்கு நூல் வடிவில் தந்து உதவும் நற்பணியில் ஈடுபடப் போகிறாராம்.

"வேறு பணி புரிகிறாயே வீணனே! வீணுக்குழைக்கிறாயே வாழா வெட்டியே! வா; விரைவில் வா; என்னை ஆராய்ந்து உலகுக்கு அளி" என்று இந்துகலை சாரம் முன்ஷியைக் குத்தம்சாட்டிக் கண்டிக்கிறதாம் 'குற்றம் செய்கிறோம் துரோகியாகக் காலங்கழிக்கிறோம்' என்ற குற்ற உணர்வு தன்னுடைய உள்ளத்தில் கிரமபி இருப்பதாக முன்ஷியே ஒப்பாரி வைக்கிறார்.

எப்பொழுது அந்த எண்ணம் அவருக்கு ஏற்பட்டுவிட்டதோ, அவருக்கு நேர்மையில் நாட்டம் இருக்குமானால் உடனே இலேசாகவல்லவா போயிருக்கவேண்டும்? ஏன் காத்துக்கொண்டு இருக்கிறார் காலம் வரட்டும் என்று?

இவருடைய உணவு நிர்வாகத்தில் நாடு கண்டது என்ன? பஞ்சம், பட்டினி, மரணம் இவைதானே, இவர் நாட்டு மக்களுக்கு அளித்த பரிசு? இந்த விக்கிரமாதித்தன் வாரிசின் ஆட்சியிலே மக்கள் கண்டது வேறு என்ன? வயிறார உணவா?

பெற்ற குழந்தையைத் தாய், விலை கூறி விற்ற காட்சி; தன் கையாலேயே கழுத்தை நெறித்துக் கொன்ற காட்சி, குழந்தையை விட்டுச் சென்ற காட்சி, மானத்தோடு வாழ்ந்த குடும்பங்கள் பிச்சைக்காரர்களாக மாறிய சோகக் காட்சி, இவைகள்தானே முன்ஷி நாட்டுக்கு அளித்து இருக்கிறார்?

இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நாட்டில் விதைத்துவிட்டவினர் கூறுகிறார், அரிசி தின்பவர்கள் அநாகரீகமானவர்கள்' என்று கேட்டுச் சகித்துக்கொண்டுதான் இருக்கின்றதுகள் தேசிய ஏடுகளும், மற்ற காங்கிரஸ் சோற்றுலடித்த பிண்டங்களும்?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் மகாசபைக்கும், காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் ஏதாவது நிரந்தரமான கொள்கைகள் இருக்கிறதா என்று கூட சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய நடத்தை இச்சந்தேகத்தை மேலும் பலப்படுத்துகிறது. வல்லபாய் பட்டேல் உயிரோடு இருந்தபோது அவர் ஓர் உத்சவ மூர்த்தியாகவும், ஜவகர் வேறோர் உத்சவ மூர்த்தியாகவும் இருந்தனர். எனவே, காங்கிரஸ் உறுப்பினர்களும் தங்கள் தங்கள் விருப்பபடி இரு கூறாகப் பிரிந்து இரு உத்சவ மூர்த்திகளையும் பின் பற்றுகிறவர்களாக இருந்தனர். ஓர் உத்சவர் மறைந்துவிடவே, அவரைப்பின்பற்றினவர்கள் ஜவகரைக் கதாநாயகர்களாகக் கொண்டவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியவர்களாகப் போய்விட்டார்கள். விட்டுக்கொடுத்து இருக்கிறார்களே யன்றி மனம்மாறி இணக்கம் காட்டவில்லை. புகை இருந்து கொண்டுதான் இருக்கும். தேர்தலுக்குப் பின்னர் இப்புகை நெருப்புப் பிழம்பாக மாறத் தான் போகிறது.

பிற்போக்கு முற்போக்கு என்ற கொள்கை காரணமாகத் தான் தாண்டனுக்கும் ஜவகருக்கும் மனப்பூசல் ஏற்பட்டுவிட்டது என்பது உண்மையாக இருக்குமானால், முன்னாள் காங்கிரஸ் தலைவராக இருந்த கிருபலானிக்கும் ஜவகருக்கும் பிணக்கு ஏற்பட்டு, கிருபலானி காங்கிரஸ் தலைமைப் பதவியை விட்டு விலகவேண்டியவரானாரே, அது ஏன்? என்ன கொள்கை அதற்குக் காரணமாக இருந்தது?

காங்கிரசின் தீர்மானங்களை திரிகரண சுத்தியாக அமுல் நடத்தத் தாண்டன் கோஷ்டியினர் விரும்பவில்லை என்று, இன்று ஜவகர் குறை கூறுகிறாரே, அதே குற்றச் சாட்டை ஜவகர் சர்க்கார்மீது, காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், கிருபலானி குற்றஞ்சாட்டினார். அதாவது காங்கிரஸ் பதவி ஏற்றுக் கொண்டதும் காங்கிரஸ் கோட்பாடுகளை செயலாற்றுவதற்குப் பதிலாக, நேர்விரோதமாக காங்கிரஸ் மந்திரிசபை நடந்து கொள்ளுகிறது என்று கிருபலானி, அப்பொழுது குறை கூறினார். ஜவகரின் மந்திரிசபை காங்கிரஸ் லட்சியங்களை அலட்சியப்படுத்தி நடந்துகொள்ளுகிறது என்று காரசாரமாகக் கண்டித்தார் காங்கிரஸ் தலைவர் கிருபலானி. அன்று, அதற்காக அவர் கொடுத்த விலை தலைமைப் பீடத்தைவிட்டு விலகியது.

அன்றும் ஜவகர், காங்கிரசை அலட்சியப் படுத்தித்தான் நடந்து கொண்டார். இன்றும் ஜவகர், அலட்சியப் படுத்தித் தான் நடந்துகொள்ளுகிறார்.

காங்கிரஸ் ஓர் சுதந்திர அரசியல் ஸ்தாபனமாக இருக்க வேண்டுமென்பதல்ல ஜவகரின் உள்ளக்கிடக்கை. தனது போக்கிற்கு—அது எவ்வளவு மோசமானதாக இருந்தபோதிலும் கூட—ஒத்து ஊதும் ஓர் கருவூலமாகக் காங்கிரஸ் மகாசபை இருக்க வேண்டும் என்பதுதான் ஜவகரின் குறிக்கோள். தன்னிடம் உள்ள அதிகாரம் மட்டற்றதாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கவேண்டும் என்பதே ஜவகரின் பேராவல். அதற்குக் காங்கிரசின் தலைமைப் பீடத்தில் எவர் இருப்பதானாலும் சரி, ஜவகரின் பேராசை ஈடேறுவதற்கு மார்க்கம் இருக்காது.

காங்கிரஸ் மகா சபையின் தலைவராக கிருபாலினியும், ஆட்சிப்பீடத்தின் தலைவராக ஜவகரும் இருந்த பொழுதும் இருவருக்கும் பிணக்கு ஏற்படத்தான் ஏற்பட்டது. கசப்பு வளர்ந்து கொண்டுதான் வந்தது. கசப்பை மாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில்தான் முடிந்தன. இறுதியில் காங்கிரஸ் தலைவரைப் பலி கொடுத்துதான் நேசம் நிலை நாட்டப்பட்டது. காங்கிரஸ் மகா சபையின் தலைவர் அரசியல் விதவையாக்கப்படுவதென்பது, அவரைத் தலைவராகக் கொண்ட ஸ்தாபனத்தையே செல்லாக்காசாக ஆக்குவது என்று தான் பொருள்.

தாண்டன், தனது காலத்தில், இழந்து கிடந்த செல்வாக்கை மீண்டும் காங்கிரசுக்குத் தேடித்தர முயன்றார். பிறருடைய தலைமையின் கீழ் செல்வாக்குப் பெற்று, தன் மீது ஆதிக்கம் செலுத்தி தனது அதிகாரத்தைச் கட்டுப்படுத்த காங்கிரஸ் மகா சபை முற்படுவதை, ஜவகரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. வாய்ப்பை எதிர் நோக்கிக் கொண்டே இருந்தார். தேர்தல் நெருங்கும் சமயமாகப் பார்த்து, காங்கிரஸ் சபையின் பொறுப்பான பதவிகளில் இருந்து விலகிக் கொள்ளப் போவதாக மிரட்டி, தாண்டன் தானாக விலகிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கி, காங்கிரசின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டார் ஜவகர்.

காங்கிரசின் தலைவர் ஜவகர்; இந்தியாவின் பிரதமரும் ஜவகர். கட்டுப்பாடு இல்லாத அதிகாரம் ஜவகரிடம் இன்று சிக்கி இருக்கிறது. ஜனநாயகத்தின் போரால் நடை பெற்ற சர்வாதிகார நாடகம் இது. ஜவகர் இனிமேல் ஜனநாயகத் தலைவர் அல்ல; சர்வாதிகாரி. ஜனநா

(16-ம் பக்கம் பார்க்க)

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுக் கஷ்டப்பட்டுக் களைப்பு தாங்காது தண்ணீருக்கேங்கிக் கொண்டிருப்பவன் கண்களுக்கு அவனை ரட்சிக்க வீரர்கள் வருவது தென்பட்டாற்போல எனக்குஒரு செய்தி தெரிய வந்தது!

பாலைநாட்டுப் புரவலனின் பொறாமைப் புத்தி, பொல்லாக்குச் செயல்கள் அனைத்தும் முல்லைக் கேட்டிருக்கிறது! மன்னர் மருண்டிருக்கிறார்! அரசவை குமுறும் எரிமலையாகக் காட்சியளித்திருக்கிறது

"கலையை இரசித்து கலைஞனை இம்சிப்பதா? கயவர் செயலல்லவா இது?... அய்யோ! என் உயிர்த்தோழரின் விரல்களை வெட்டிவிட்டானுமே அவ்வீணன்! என்ன வேதனையை யனுபவித்துக்கொண்டிருக்கிறாரோ அவர் அந்தப் பாதாளச் சிறையில்! இனி அவரால் அழகோவியங்களைச் சிருஷ்டிக்க முடியாதா? நான் ரசிக்க இனி ஓவியங்களே கிடையாதா?..." என்று அழுது புலம்பியிருக்கிறார் அரசர்!

"அரசே! இது என்ன அநீதி! இது கலையையும் கலைஞனையும் மட்டுமல்ல அவன் நாட்டையே அவமதிக்கும் செயல்! அடாத செயல்! ஆசை மிகுதியால், செய்துள்ள அக்கிரமச் செயல்! அரசே! அவ்வீணனுக்குப் புத்தி புகட்ட வேண்டும்! ஆம்! "முல்லை நாடு, தன் கலைஞனைப் பாலைநாடு அவமதித்து இம்சித்ததற்காக அமர்க்களத்தில் அந்நாட்டைச் சந்தித்து உக்கிரமாக, வீராவேசத்துடனும் உணர்ச்சி வேகத்துடனும் முல்லை நாட்டு வீரர்கள் போர் புரிந்தனர்! வீணரை வீழ்த்தினர்! பாலையின் பாதாளச்சிறையில் பரிதாபகரமான நிலையிலிருந்த தம் நாட்டு கலைஞனை மீட்டனர்" என்று வருங்கால உலகம் பேச நாம் வழி செய்ய வேண்டும்! ஆம், இனி தாமதம் கூடாது! பாலைப்புரவலனைப் போர்க் களத்தில் பேட்டி காண வேண்டும்! நம் நாட்டுக் கலைஞரை, நம் அருமை இன்பதாசரை மீட்டுக்கொணர்ந்து மீண்டும் நம் அவையில் அமரச் செய்தல் வேண்டும்!........"

பவின்பா! இந்தப் பேச்சில் எவ்வளவு அன்பும், ஆசையும், வீரமும் உக்கிரமும் கலந்திருக்கிறதென்பதைக் கண்டாயா? இப்படிப் பேசினவர் யார்?......சேனைத் தலைவர் மாறனா? அல்லது என் அன்பு நண்பர்களா? அல்ல! நான் வஞ்சகன் என்று எண்ணி வந்த நஞ்சநாதர் தான் இங்ஙனம் பேசியிருக்கிறார்! பூசுரனாக அவர் இருக்கின்ற காரணத்தால் அவரிடம் பொறாமையும் பொச்சரிப்பும் இருக்குமென நான் எண்ணினேன்! ஆனால் அவ்வந்தணரிடம் அன்பும் அருளும் வழிந்தோடியிருப்பதைக் கேட்டபொழுது எனக்கு ஆச்சரியமாகவும், அவமானமாகவுமிருந்தது!

"ஆம், அந்தப் பயலை முதலில் ஒழித்துக்கட்டவேண்டும்! அப்பொழுதுதான் நம் திட்டங்களை நிறைவேற்ற முடியும்'......" இப்படி ஒரு நாள் அவர், மந்திரி விக்கிரமனிடம் குசு குசு வென்று பேசிக் கொண்டிருந்தது உண்மையில் "கதை" யாகத்தானிருக்க வேண்டும்! சே! என்ன மட்டரகமாக நான் அவரை எண்ணினேன்!

"அரசே! நீர் மட்டுமா அவர் தாசர்! இந்நாட்டு மக்களனைவரும் அவர்தாசர்தான்!..." இப்படி அவர் கூறினபோழுது அது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெடித்து வரும் வார்த்தையல்ல, இது அவன் உதட்டின் விளிம்பிலிருந்து வழியும் வார்த்தைதான் என எவ்வளவு தவறாக எண்ணினேன்!...... சே! இப்பொழுது தானே தெரிகிறது, நஞ்சநாதர் உண்மையில் ஒரு பச்சோந்தியல்ல, பசுத் தோல் போர்த்த புலியல்ல என்பது!...... ஆம், "பூசுரன்" என்ற ஒரே காரணத்திற்காக நான் அவர் மீது சந்தேகங்கொண்டு அவரை வெறுத்தது எவ்வளவு கேவலமான புத்தி!...... நஞ்சற்ற நாகம்—தந்திரமற்ற நரி—களங்கமற்ற மதி ஏன் இருக்கக் கூடாது?—வஞ்சமறியாத அந்தணர் நஞ்சநாதர் இருக்கும் பொழுது?.........

—இப்படியெல்லாம் எண்ணியெண்ணி, என்னையே நொந்து கொண்டிருந்தேன்.

அநேக நாட்கள் செல்லவில்லை.

அமர்க்களத்தில் முல்லையும் பாலையும் மோதிக்கொள்ள!

வாளொடு வாள்! அம்போடு அம்பு! இரதத்தோடு இரதம்! உதிரத்தோடு உதிரம்!......

போர்! பெரும்போர்! பல நாட்களாகப் போர்! கலைக்கு மதிப்பு தரப் போர்! கலைஞனை அவமதித்ததற்காகப் போர்! கலைஞனை மீட்கப் போர்! கயவனைக் கவிழ்க்கப் போர்! முல்லை தன் கலைஞனிடம் கொண்டுள்ள அன்பைக் காட்டப் போர்! முல்லை வீரர்கள் தங்கள் வீராவேசத்தையும் உணர்ச்சி வேகத்தையும் பாலை நாட்டுப் புல்லர்களுக்குக் காட்டப் போர்! சீறிப் போரிடும் சிறுத்தைகள் இரண்டிற்கிடையே பெரும் போர்!

போர் பல நாட்களாக நடந்து கொண்டிருந்தது!—என் உள்ளத்திலுங்கூட! ஆம். மனப் போர்!...

முல்லை வெற்றிபெற்றால் எனக்கு விமோசனம்! பாலைவென்றால் எனக்குச் சித்திரவதை! சிரச்சேதம்! முல்லைவென்றால் என் ஆசை மனைவியை முத்தமிடலாம்! பாலைவென்றால் மரணத்தை முத்தமிடலாம்!...

என் மனத்தில் பெரும் போராட்டம்!

"வெற்றி! வெற்றி! பாலைக்கு வெற்றி! முல்லைப்படை மிரண்டோடுகிறது!..."

காவலாளியொருவனின் இக்குரல் கேட்டுத்தாங் கொணாத் துயரங்கொண்டேன்.

"போர் முடிந்து விட்டதா?" என்றேன். அவன் சிரித்துக் கொண்டே,

"ஆமாம்! இன்னும் சிறிது நேரத்தில் முடிந்துவிடப் போகின்றன!—முல்லையில் முத்துவீரர் ஆட்சியும், உன் உலக வாழ்வும்!... என்று உரக்கக் கத்தியபடி சொன்னான்.

(16-ம் பக்கம் பார்க்க)

"போர்வாள்" சந்தா விவரம்

★

ஓராண்டு	ரூ. 6 8 0
6 மாதம்	ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சீதாராம சாஸ்திரியின் பட்டினி பாரெங்கும் பரப்பப்பட்டதுபோல சாதுவின் உண்ணாத் திருக்கோலம் விளம்பரப்படுத்தப்படவில்லை. டெல்லி தேவதையின் திருவருளும் கிடைக்கவில்லை. விருதுநகர் விரதம் தமிழ்நாட்டின் எல்லையையும் தாண்டவில்லை. மிக மிகச் சாமான்யரான சாதுவின் உண்ணாவிரதம் தீ கண்ட சருகுபோல் துவக்கத்திலேயே பொசுங்கிப் போய்விட்டது.

* * *

விருதுநகர் வீரரைப் போலவே, திருவாங்கூரிலும் ஒரு தொண்டர், கொச்சி—திருவாங்கூர் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்குள் நேசபாவத்தைத் தோற்றுவிக்கப் பட்டினி கிடக்கப்போவதாகச் செய்தி ஒன்று வந்தது. எந்த வினோபாபாவே தலையிட்டோ, தெரியவில்லை, தொண்டர் திருவிளையாடல் இருட்டடிக்கப்பட்டுவிட்டது.

* * *

இந்து சட்டத் திருத்த மசோதா கொட்டு முழக்கோடும், ஜவகரின் மிரட்டல் மொழியோடும் யூனியன் பார்லிமெண்டில் அரங்கேறியது. அம்மசோதாவை எதிர்த்து சங்கராச்சாரி முதல் சந்நியாவர்த்தனம் என்றாலே என்ன அர்த்தம் அதற்கு என்று கேட்கும் வேதவித்துக்கள் வரை எதிர்த்தனர். ஜனாதிபதி இராஜேந்திரபிரசாதும், அந்நாள் காங்கிரஸ் தலைவராக இருந்த பட்டாபியும் இன்னும் பலப்பல சனாதனப் பாதுகாவலர்களும் எதிர்த்தனர்—சல்லடம் கட்டினர். 'அசகாய சூரர், அஞ்சா நெஞ்சர், புத்துலக வழிகாட்டி' ஜவகர், மார்தட்டினார் மன்றமேறி, சட்டமாக்கியே தீருவேன் என்று.

ஆனால், காலத்தின்மேல் பழி போட்டுவிட்டு, ஜவகரே, முன்னாள் கூறியதற்கு முரணாக, மசோதாவைக் கைவிடுகிறார். மசோதா கழிவுக்கூடைக்குப் போகிறது.

வைதீகர்களின் வாதங்கள் அறிவுக்கும் காலத்துக்கும் பொருத்தமற்றவைகள் என ஒதுக்கித் தள்ளப்பட்டுவிடவே, பட்டினி கிடந்தாவது மசோதா நிறைவேறவிடாமல் செய்துவிடுவதென்று தீர்மானித்துவிட்டது தென்னாட்டு ஆசாமி—இல்லை—சாமிஜி ஒன்று. தென்னாட்டில் சனாதன ஆச்சாரண சங்கம் என்ற ஒன்றைக் கண்டவராம் அந்தச் சாமி. அவர் பெயர் சாமி சரஸ்வதி என்பது.

இந்த ஆறவுன்ஸ் காலத்தில் கூட சாமியின் மேனி கொழு கொழு என்றுதான் இருக்கிறது. அந்த ஆசாமி வேறு யாரும் இல்லை. சென்னை சட்டசபையில் அறநிலையப் பாதுகாப்பு மசோதா விவாதிக்கப்பட்டபோது சட்ட சபை மண்டபத்திற்கு முன் பட்டினி இருப்பதாகப் பிதற்றி, பால் பழமாகச் சாப்பிட்டுப் பட்டினி கிடந்ததே அதே ஆசாமிதான் அது.

டெல்லிக்கே போய்விட்டது அது. பார்லிமெண்டு மண்டபத்தின் முன் கிடப்பது என்று சில நாள் பட்டினி கூடக் கிடந்ததாம். அதனுடைய 'தற்கொலை' முயற்சியைப் போலீஸ் கூட தடுத்ததாம். மருத்துவ விடுதிக்குக் கூட சர்க்கார் அதை அனுப்பியதாம்!

மசோதா கைவிடப்பட்டது என்று மசோதாவை எதிர்த்துப் பேசிய பார்லிமெண்டு உறுப்பினர்கள் ஆசாமியிடம் கூறினதும், சாமியார் 'ஒரு அண்டா' எலிமிச்சம் பழ சர்பத்தைக் குடித்துத் தனது விளம்பரப்பட்டினியை முடித்துக் கொண்டதாம். காக்காய் உட்கார்ந்
தற்கும் பனம்பழம் விழுந்தத
கும் சரியாகி விட்டது என்
நியாயப்படி, சத்தியானந்த சரஸ்
வதியின் 'போலிப்பட்டினி' பல
னளித்துவிட்டது.

* * *

இந்து சட்டத் தொகுப்பு
மசோதாவை சட்டமாக்கக்
கூடாது என்று மற்றொரு
சனாதனி கும்பகோணத்தில்
இருந்து கிளம்பி இருக்கிறார்.
அவர் பெயர் பூவராக ஆச்சாரி.
அவர் இத்திங்கள் பத்தாம்
தேதியில் இருந்து பட்டினி
கிடக்கப்போவதாக அறிவித்
திருந்தார். மேல் விவரம் தர
வில்லை சுடஜாதிமித்திரன்.

* * *

பூனாவில் பத்வாலின் என்ற
பள்ளி ஆசிரியர் சாகும்வரையில்
பட்டினி கிடக்கப்போவதாகத்
தீர்மானித்து 44 நாட்கள் பட்
டினி கிடந்து இருப்பதாக
14—9—51-ல் செய்தி கிடைத்தது. அவர் சாப்பிட முனைந்து விட்டாரா அல்லது அவர் கூறுரைப்படியே இறந்துபட்டாரா என்பது தெரியவில்லை.

'அவருடைய கோரிக்கை ஏதோ செகண்டரி கல்வி விஷயமாக ஏற்பட்டு இருக்கிறது. பம்பாய் சர்க்காரின் மனதை மாற்ற அவர் பட்டினி கிடக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம்

சென்னை

13-வது வட்டக் கிளை

இக் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் மண்ணடி 43-ஆம் எண்ணுள்ள இல்லத்தின் மேல் மாடியில் 30-9-51 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும். அனைவரும் வருக.

ஆனால் பம்பாய் சர்க்காரோ இதபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் 'ஆசிரியர் உண்ணா விரதம் இருந்து சாகப்போவ தாகப் பயமுறுத்தியுள்ளார். இத னால் அவருடைய உடல்நிலை மோசமாகி இருப்பது கண்டு வருந்துகிறோம். இருந்தாலும் கட்டாய முறைகளால் எங்களைக் கட்டுப்படுத்த முடியாது' என்று பம்பாய் சர்க்கார் குறித்துள் ளது. ஆசிரியர் இருக்கும் பட் டினியை 'பயமுறுத்தல்' என்றும், 'கட்டாயமுறை' என்றும் எடுத்துக் காட்டி விட்டு, சர்க்கார் பணி ந்துகொடுக்காது என்றும் பம் பாய் சர்க்கார் அறிக்கை வெளி யிட்டுவிட்டது.

ஆசிரியரின் உண்ணாவிரதத் தையும் அதற்கு பம்பாய் சர்க் கார் காட்டும் அலட்சியத்தை யும், சென்னையை விழுங்க சீதாராம சாஸ்திரி இருந்த உண்ணாவிரதத்தையும் டெல்லி சர்க்கார் காட்டும் அனுதாபத்தை யும் ஒப்பிட்டுப் பார்த்தால், பட்டினி கிடக்கும் ஆளைப் பொருத்துத்தான் பட்டினி விரதம் வெற்றி பெறுவதும் தோல்வி அடைவதும் இருக் கிறது என்னும் உண்மையை நன்கு தெரிந்து கொள்ளலாம்:

ஐயோ பாவம்! ஆசிரியர் தோழி வாழ்க!

* * *

மற்றொருவர் சபர்மதி மத் திய சிறையில் காவல் கைதியாக இருக்கும் அர்சுன்பகத் என்ப வர் இத்திங்கள் 5-ந் தேதியிலி ருந்து பட்டினி இருக்கிறாராம். மந்திரிகள் எல்லாம் மக்களுக் குப் பிறந்தவர்கள் என்றால் அவர் மட்டும் மாட்டுக்குப் பிறந்தாரோ என்னமோ, அவர் பசுவதைத் தடுப்புக்கே கிளர்ச்சி செய்பவராக இருக் கிறார். தன்னைப்போன்ற மக் களின் நலம் அவருக்குப் பெரி தாகப்படவில்லை. ஆனால் பசு வின் நலம்தான் அவருக்குச் சிறந்ததாகப்படுகிறது. அவ் வளவு மூடநம்பிக்கை—இந்து மத வெறி!

* * *

ஜல்பை குறிஎன்ற ஊரில் இத் திங்கள் பதினொன்காம் தேதியிலி ருந்து உதவிக் கமிஷனர் காரியா லயத்துக்கு முன் 9 பேர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின் றனர்.

'1952-லிருந்து சட்டபூர்வ மாகத் தானிய பங்கீட்டு முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என் றும், இடைக்கால ஏற்பா டாக அரைகுறையான ரேஷன் பகுதிகளில் அரிசி கோட்டாவை அதிகரிக்க வேண்டும் என்றும் கோரி இங்கு இன்று உதவி கமிஷ னா காரியாலயத்துக்கு முன் 9 பேர்கள் உண்ணாவிரத மிருக்க ஆரம்பித்துள்ளனர். பல்வேறு இடதுசாரி கட்சி களின் ஆதரவும் இவர்களுக் குக் கிடைத்துள்ளது. மணு ரூ. 30-க்கு மேல் ஏறிப்போ யுள்ள இடங்களில் எல்லாம் அரிசியை கண்ட்ரோல் விலை களில் விற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.'

இந்த உண்ணாவிரதிகளின் கோரிக்கை நியாயமானதுதான். சர்க்கார் உடனடியாக அவர்க ளுடைய கோரிக்கைகளைக் கவ னித்துப் பரிகாரம் தேடவேண்டி யதும் அவசியம்தான். ஆனால் அவர்கள் கோரிக்கை ஈடேறுமா என்பதுமட்டும் சந்தேகம்தான்.

* * *

இதோ கல்கத்தா அருகே மற்றோர் பட்டினிப் பட்டாளம்.

"தூக்கலான விலைகளில் உணவுப்பண்டங்களை வாங்க முடியாமல் நின்றும் கிராம வாசிகளுக்கு நிவாரணமளிக்க சட்ட பூர்வமான ரேஷன் முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென கோரி பாரசாத் சப்டிவிஷ னல் அதிகாரியின் கோர்ட் காம்பவுண்டில் 24-8-51-ந் தேதி காலையிலிருந்து 3 பெண்கள் உட்பட 12 பேர் கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். பாரசாத் கல் கத்தாவிலிருந்து 14-வது மைலில் உள்ளது."

"அக்கம்பக்கத்திலிருந்து சுமார் 300 பேர்கள் பட்டினி தாங்காது மேற்படி கோர்ட் டுக்கு ஊர்வலமாக வந்து சுமார் 24 மணி நேரம் அதன் எதிரில் அமர்ந்திருந்த னர். உண்ணாவிரதமிருக்கும் 12 பேர்களைத் தவிர்த்து பாக் கியுள்ளோர் மறுநாள் காலை இடத்தைவிட்டுக் கிளம்பிச் சென்றனர்."

இந்த உண்ணாவிரதிகளைக் கேட்பாருமில்லை, ஏறெடுத்துப் பார்ப்பாருமில்லை. விநோபா பாவேக்கள் இவர்கள் இருக்கும் திக்கு நோக்கிக்கூடச் செல்ல மறுக்கிறார்கள்.

இவர்கள் இருப்பதை 'உண் ணாவிரதம்' என்று சொல்ல

(16-ம் பக்கம் பார்க்க)

பகுத்தறிவு

அறிவியல் திங்கள் வெளியீடு.

ஆசிரியர்: ப. கண்ணன்

"பகுத்தறிவுக்கு" கீழ்க்கண்ட ஊர்களுக்கு உடனே விற்பனையா ளர்கள் தேவை:

சென்னை, தஞ்சாவூர், சிதம் பரம், திண்டுக்கல், காரைக்குடி, ஆற்காடு, விழுப்புரம், கரூர், கும்ப கோணம்.

விபரங்களுக்கு:

பகுத்தறிவு அலுவலகம்

சலகண்டபுரம் சேலம் மாவட்டம்.



பத்தாம் பகுதி

வருத்தம்! வேதனை!!

பரிவின்பா! இன்பமும் துன்பமும் "வாழ்க்கை வண்டி"யின் இரு சக்கரங்களென்பதை முன்பே கூறினேனல்லவா?

"அத்தான், உலகம் எப்பொழுதும் வாயைத் திறந்துகொண்டிருக்கும்! சில நாட்களுக்கு வாழ்த்துச் சொற்களும், சில நாட்களுக்கு வசைச் சொற்களும் அதனின்று வெளி வந்து கொண்டேயிருக்கும்!......" என் வேணி அப்பொழுது—இப்படிக் கூறினாளல்லவா?

இவை நான் கண்டவை—கேட்டவை மட்டுமல்ல, அனுபவித்தவையுங் கூட!

தம்பி! உலகம் எப்பொழுதும் வாயைத் திறந்துகொண்டுதானிருக்கிறது!.........

அன்று நான் பாலைநாட்டுப் புரவலரிடம் விடைபெற்றுக்கொள்ளச் சென்ற பொழுது மட்டற்ற மகிழ்ச்சியுடன்தான் சென்றேன். ஆனால் சிறிது நேரத்திற்குள்ளாக அந்த மகிழ்ச்சி மங்கிவிட்டது! பரிவின்பா! மகிழ்ச்சிக்கு அன்றேடு என் வாழ்வில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது!

ஆம்! புரவலன் பைத்தியக்காரனைப்போலப் பேசினான். பூசுரன் அவனுடன் சேர்ந்து பல்லவி பாடினான்! ஆம், நீ குறிப்பிட்டாயே பாலைநாட்டின் புரவலர் பாஷாண பூபதி என்று! அவனேதான் பரிவின்பா அன்று பரந்தாமனுடன் சேர்ந்து கொக்கரித்தான்! நான் பிரமித்துப் போனேன்.

"என்ன ஓவியரே! விடைபெற்றுக்கொள்ள வந்துள்ளீரா?......... அஹ்ஹஹ்ஹா?...ஆமாம் ஆமாம்! நீர் விடைபெற்றுக் கொள்ள வேண்டியது நியாயந்தான்! ஆமாம். நீர் இப்பொழுது குடியிருக்கும் மாளிகையிடம் விடைபெற்றுக் கொள்வது நியாயந்தான்!...நீர் இனிமேல்தான் உண்மையான அரசியல் விருந்தாளி!..."

"அரசே! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!..."

"விளங்காது! விளங்காது! அது இனித் தானாக விளங்கும்!—நீர் சிறையிலிருக்கும் பொழுது!

"சிறையிலா? நானா?...அரசே! இது என்ன? எனக்கு உலகமே சுழலுகிறதே!..."

"ஓஹோ!...அப்படியானால் இந்த பஹாலைக் கொண்டுபோய்ப்பாதாளச் சிறையிலடையுங்கள்! அந்த உலகமாவது சுழலாமலிருக்கும் இவனுக்கு!..." புரவலன் பேரிரைச்சலிட்டுச் சிரித்தான்! பூசுரன் பாஷாண பூபதி பாஷாணப் பார்வையால் என்னைப் பார்த்துச் சிரித்தான்!

"அரசே! இதற்கெல்லாம் காரணம் கிடையாதா?........."—நான் கேட்டேன்.

"காரணம்!....அஹ்ஹஹ்ஹா!.... கலைஞன் எல்லா நாடுகளுக்கும் உரியவனாக இருக்கக் கூடாதென்பதுதான்! ஆமாம். முல்லை நாட்டுக் கலைஞனாகிய நீ பாலைநாட்டுச் சிறைக்கே உரியவனென்பதுதான்!..."

"ஆ! என்ன அநீதி! பொறா...யும் பொச்சரிப்புந்தான் இப்ப... உம்மைப் பேசவைக்கிறதா?.... அழகு ஓவியங்களை அளித்த...னுக்கு நீர் அளிக்கும் பரிசு அத...விதல சுதல தராதல பாதாள... சிறையா?...எவ்வளவு சாகசம... கப் பேசி என்னை வரவேற்றீர்... இப்பொழுது கொக்கரிக்கிறீர்! இத...கான் உலகமா?......அய்யோ! எ...வளவு மகிழ்ச்சியுடனிருந்தேன்!—என் நாட்டையடைய! ஏ! அ...சனே, என்னை என் மனைவி... பிள்ளையிடமிருந்து பிரிக்கும்... உன் மனைவி பிள்ளைகளுடன் வா... வாயா?..." வேதனைக் குரலெழு...பினேன்! காவலாளிகள் என்னை... சிறைக்கோட்டத்திற் கிழுத்து... சென்றனர்! சிறை புகுந்தேன்.

மகிழ்ச்சியின் மாளிகையாயி...ருந்த நான் வருத்தத்தின் வீடா...னேன்! வேதனை! வருத்தம்! இவை...யிரண்டும் என்னை வாட்டின!—வாட்டுகின்றன! முத்து விரு...வேணியும் வாழும் இவ்வுலகி...பரந்தாமனைப் போன்றவர்களு...வாழ்கின்றார்களே என எண்ணி... எண்ணி ஏங்குவேன்!

பட்டுப் பீதாம்பரங்களில் பு...துறங்கிய நான் வைக்கோலி...புரண்டுருண்டு கொண்டிருக்கல...னேன்! தங்கத் தட்டில் சாப்பிட்...நான் மண் சட்டியில் கூழ் சா...பிடலானேன்!......அதற்கெல்லா... கூட நான் வருந்தவில்லை!—ஆ...அவைகளை நான் பொருட்படுத்...வில்லை!—என் அழகு மனைவியை...யும் குழந்தையையும் காணுதிருக்... முடியவில்லை என்றால்! அதனா...தான் எனக்கு அவ்வளவு வேதனை...யும் வருத்தமும்!

பரிவின்பா? நான் பைத்திய...காரனானேன்!

"வேணி! வேணி! என் அழ...ராணியே!......" என்றலறுவேன்... எதிரே தோன்றும் கற்றூணைக் க...டியணைப்பேன்! பின் உதைப்பேன்... உரக்கச் சிரிப்பேன்!

"அரசே!" என்பேன். முல்லை... நாட்டு மன்னர் என் முன்னே நி...பதைப் போலிருக்கும்!.....ஆமாம்... அந்தக்கற்றூண் அரசராகக் காட்...யளிக்கும். அதைக் கட்டித் தழு...வேன்! பின், "ஏ! அரசே!...உ...னால்தான் நான் என் மனைவியை...யும் குழந்தையையும் பிரிந்து இ...படி வாழ்கின்றேன்!......" என்...

கூச்சல்போட்டு அக்கற்றூணை ஒரு உதை உதைப்பேன்!

"ஆ! என்ன காரியம் செய்துவிட்டேன்!... அரசே! என்னை மன்னிக்க வேண்டும்!......" எனக்கூறி அக்கற்றூணின் கீழ் விழுந்து விடுவேன். அப்படியே படுத்துக்கொண்டிருப்பேன். வாயில் நுரை தள்ளும்.

"பாலைநாட்டு மன்னன் பரந்தாமன் அழிந்தொழிந்து போகட்டும்! பாலைநாடு பாலைவனமாகட்டும்!..." என்று கத்துவேன். காவலாளிகள் கண்டபடி திட்டுவார்கள்; சவுக்கால் நையப்புடைத்துவிடுவார்கள். சுருண்டு விழுந்துவிடுவேன். "தண்ணீர்! தண்ணீர்!..." என்று மென்மையான ஸ்தாயியில் கத்துவேன்!... அக்காவலாளிகளுக்கே பரிதாபமேற்படும்! எனக்குத் தண்ணீர் கொடுப்பார்கள். தண்ணீரைக் குடித்துவிட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம் கத்த ஆரம்பித்துவிடுவேன்!

அன்று ஒரு காவலாளியைப் பார்த்து என் மாளிகையிலிருந்த ஓவியக்கோல், வண்ணக்குழம்புகள் ஆகியவற்றைக் கொண்டுவருமாறு கேட்டேன். அவன் உரக்கச் சிரித்துவிட்டு அடுப்புக்கரித் துண்டுகளையும், சுண்ணாம்புக் கட்டிகளையும் கொடுத்து "இதைக்கொண்டே சித்திரம் எழுது!..." என்றான். நானும் அவைகளைக் கொண்டே சிறைச் சுவரில் ஒரு சித்திரம் தீட்டினேன்.

ஒரு காட்டில் ஒரு புலி ஒரு புள்ளிமானைத் துரத்துகிறது!—இப்படி ஒரு ஓவியம் வரைந்து,

"ஏ புள்ளிமானே! நீ செய்த குற்றம் தானென்ன?" என்றெழுதினேன்.

அதை அரசன் பார்த்துவிட்டான்! என்னைச் சவுக்கால் அடித்தான். அதோடு "இனி உன்னைச் சித்திரம் எழுத முடியாமலே செய்துவிடுகிறேன் பார்!" எனச் சொல்லிவிட்டுப்போனான்.

அடுத்த நாள் காலை!

பயங்கர மனிதர் இருவர் பட்டாக்கத்திகளுடன் வந்தனர். நான் மிரண்டேன். என்னைப் பிடித்துக் கட்டினார்கள், அக்கற்றூணில்! என் கண்களைக் கட்டிவிட்டார்கள்.

பிறகு?... ஆ! அய்யோ!..." அதை நினைத்தாலே என் நெஞ்சு கொதிக்கிறது தம்பீ!

பரிவின்பா! எண்ணற்ற அழகு ஓவியங்களை உருவாக்கிய என் விரல்களுக்கு அவர்கள் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுத்துவிட்டார்கள். ஆம், என் இரு கை விரல்களையும் தறித்துவிட்டார்கள். மானை செய்த குற்றத்தைத்தான் அவைகள் செய்தன! மான் அழகாயிருக்கிறது! என் விரல்கள் அழகோவியங்களை உண்டு பண்ணின! புள்ளிமானின் வசீகரத்தோற்றம் வேங்கையின் கண்களை உறுத்துவதைப் போல என் அழகு ஓவியங்கள் அவ்வரசரின் கருத்தையுறுத்தின!...

இந்த உலகில் ஒருவன் ஏழையாயிருந்தால் வாழ முடியாது! கலைஞனாயிருப்பவன் சின்னாட்களுக்குத்தான் வாழ முடியும்! அதிலும் சிறிது நாட்கள் புகழுடன்! சிறிது நாட்கள் தூற்றலுடன்! சிறிது நாட்களுக்குச் செல்வத்துடன்! சிறிது நாட்களுக்கு வறுமையுடன்! சிறிது நாட்கள் இன்பத்துடன்! சிறிது நாட்கள் துன்பத்துடன்!

நான் அவைகளையனுபவித்து அறிந்துகொண்டேன். இப்பொழுது துன்பமனுபவித்துக்கொண்டிருக்கும் இளைஞர்கள் ஒரு நாளில் இன்பமனுபவிக்கலாம்! ஆனால் நான் இனி இன்பம் என்பதையே எட்டிப்பார்க்க முடியாது!

"நான் ஏன் ஒரு ஓவியக்காரனானேன்? அதிலும் ஒரு சிறந்த ஓவியக்காரனாக!... சாதாரண போர் வீரனாக நானிருந்திருந்தால் இவ்வளவு துன்பங்களை அனுபவித்திருப்பேனா!... என் நண்பர்களும், மற்றோரும் என் ஓவியங்களைப் பரிகசித்துத் தூற்றின பொழுதே நான் இக்கலையைக் கைவிட்டிருந்தால் இவ்வளவு துன்பங்கள் என்னை அணுகியிருக்குமா? என் மனைவியையும் மகனையும் பிரிந்து வாழ்வேனா? ஆனால் நான் ஒரு ஓவியனாக ஆகியில்லாவிடில் முல்லை நாட்டின் மன்னருடன் நட்புகொண்டிருக்கமுடியுமா?..."

இப்படியெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தேன் சிறையில்!

பாலைநாடு பொறாமைக்காரர்களின் பாடிவீடாக—வஞ்சக நெஞ்சம் படைத்தவர்களின் உல்லாசவீடாக இருப்பது எனக்குத் தெரிந்திருந்தால்—என் கலைத்திறனைக் கண்டு என்னை சித்திரவதை செய்யப்போகிறார்கள் அச்சண்டாளர்களென்பது எனக்குத் தெரிந்திருந்தால் நான் பாலைக்கேகியிருப்பேனா? முல்லையிலே சிரித்துத்தென்றலிலே சொக்கி என் மனைவியுடன் இன்ப வாழ்வு நடத்திக்கொண்டல்லவா இருந்திருப்பேன்!...... அய்யோ! இவையெல்லாம் தெரியாது என்னைப் பலவாறு புகழ்ந்து, கலைஞன் எல்லா நாடுகளுக்கும் உரியவனென்று உரிமை கொண்டாடி வரவேற்றதனால்தானே நான் அப்பாலைக்கேகினேன்! அந்தோ!.. நான் கொண்ட கலையை இனிக் கையாள முடியாமற் போகச் செய்துவிட்டானே சண்டாளன்!... பரிவின்பா!... இந்த உலகில் பாலைநாட்டுப் புரவலன் பரந்தாமன் போன்றோர் இருக்கும் வரை—வஞ்சக விழிகள் இருக்கும் வரை—பொறாமை, பொச்சரிப்பு கொண்ட பிண்டங்கள் இருக்கும் வரை—கலையை இரசித்து கலைஞனை இம்சித்தும் அவன் அக்கலையை மீண்டும் கையாள முடியாதபடி கேடுகள் செய்யும் கொடுமதியாளர்கள் உள்ளவரை கலைகள் வளருமா? உன்னத நிலையடையுமா? உலகம் கலைகளால் அலங்கரிக்கப்படுமா? கலைஞர்கள் வாழ முடியுமா? தோன்ற முடியுமா?

பரிவின்பா! நான் வேதனையையும் வருத்தத்தையும் என் சொந்த உடைமைகளாகக் கொண்டு விட்டேன்! என் விரல்கள் வெட்டுண்டதை யெண்ணும் பொழுது வேதனை! வருத்தம்! என் மனைவி, குழந்தையைப்பற்றி எண்ணும் பொழுது வேதனைமூச்சு விடுவேன்! நினைவிலும் கனவிலும் கூட வேதனை வாடையேதான் வீசிக்கொண்டிருக்கும்! வேதனை! வேதனை!! வருத்தம்! வருத்தம்!!

பதினோராம் பகுதி

நஞ்சற்ற நாகம்

பாலைவனத்திலே பல மைல் தூரம் நடந்து தாகந்தாங்காதிருப்பவன் கண்களுக்கு ஓர் ஓடை தெரிந்தாற்போல—கதிரவன் உஷ்ணம் தாங்காது பெருஞ்சுமை விறகைச் சுமந்து வியர்வை வடித்துக் கொண்டு செல்பவனுக்கு ஒரு சுமை தாங்கி கிடைத்தாற்போல—கள்ளிடம் சிக்கிக்கொண்டு கசையடி

(11-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யும்—ஆனால் அவர் அளித்துள்ள வாசகங்களைக் கூர்ந்து கவனியுங்கள்—அந்த வாசகங்களிலே இந்தச் சொற்களெல்லாம் நிச்சயமாக நிழலாடுவதை நீங்கள் காணமுடியும்.

இந்தி தேசிய மொழியாகவோ பொது மொழியாகவே இருப்பதற்கு இம்மியளவும் தகுதியற்ற மொழி என்று நாம் கூறுகிறபோது கொதித்தெழுந்து கூவுகிற சின்னதுகளும் பெரியதுகளும், ஒரு காங்கிரஸ் அமைச்சர் ஏனைய பல காங்கிரஸ் ஊழியர்களிடையே பேசுகிறபோது பயன்படுத்துவதற்குக் கூடத் தகுதியற்ற மொழி இந்தி என்று அதனை ஒதுக்கித் தள்ளிவிட்டாரே காட்கில், இந்தப் பூணாரம்பூண்ட புதுமைக்கென்ன செய்யப்போகிறார்கள்? ஒருக்கால் காட்கில் எதிர்ப்பு மாநாடு ஒன்று கூட்டி, காட்கில்மீது கண்டனக்கணைகளைப் பொழிவார்களோ?

பொறுத்திருந்துபார்ப்போம்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யக ஏற்பாட்டின் பெயர் கூறி, மக்களின் வாக்குகளைப் பெற்று, ஆட்சிப் பீடத்து அமர்ந்து அதிகாரத்தைப் பெற்றதும், தனக்கு இன்னிலையைத் தேடித் தந்த ஜனநாயக அமைப்பையே ஆழக் குழி தோண்டிப் புதைத்ததை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

ஜவகர் சர்வாதிகாரியாகிறார். காங்கிரஸ் அவருக்குக் கட்டியங் கூறும் கோமாளிக் கோட்டம் ஆகிறது. இது தான் உண்மை இது, எதிர் காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை எடுத்துக் காட்டும் ஓர் அறிவிப்பு.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. போரும் நடந்துகொண்டேயிருந்தது!

"இன்னும் போர் முடியவில்லையா?" என்று மற்றொருநாள் அவனிடம் கேட்டேன்.

அவன் என்னை உக்கிரமாகப் பார்த்தான். அதிலிருந்து பாலையின் வாங்குகிறது என்பதைப் புரிந்துகொண்டேன்! புன் முறுவல் புரிந்தேன்! பின் சிரித்தேன்!—அச்சிறைக்கூடம் அதிர!

"ஏனடா சிரிக்கிறாய்? சிறுமதி படைத்த நரியே!..." என்று என் மீது சீறிப்பாய்ந்து வந்து அச்சிறைக் காவலாளி சவுக்கடிகளைச் சரமாரியாகப் பொழிந்தான்! இரத்தம் என் உடலில் கசிந்தோடியது! நான் அந்த அடிகளைச் சகித்துக் கொண்டேன்! என் நாடு வெற்றியடையப்போகிறதை நானறிந்ததால் அந்த அடிகள் எனக்கு உறைக்கவில்லை! நான் சிரித்துக் கொண்டேயிருந்தேன் பரிவின்பால்.

ஓர் நாள்!...ஒப்பற்ற நாள்!... என உள்ளம் குளிரும் செய்தி கிடைத்த நன்னாள்! ஆம். முல்லை வெற்றிபெற்றது!

பாலை தோற்றது!

(தொடரும்)

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கே இல்லை. இவர்கள் நிரந்தரப்பட்டினிப் பட்டாளம், சர்க்காரின் கவலைக்குறைவு, இவர்களைப்பட்டினிப்படையினரா ஆக்கிற்று. இவர்களுடைய குறைகள் களையப்படா. போலீசும் இராணுவப்படையும் இவர்கள் மீது பாய்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கையில் சிக்கி இருக்கும் அதிகாரத்தைத் தன்னுடையபிதிரார்ஜித சொத்தாக இருக்கப் பார்த்துக்கொள்ள ஆலாய்ப் பறக்கும் ஜவகர், இந்தப் பட்டினிப்படையினர் விஷயத்தில் உடனடியாகக் கருத்தைச் செலுத்தின் நன்றாக இருக்கும். அவருக்
குத்தான் காங்கிரஸ் கட்சியின
களுக்குள்ளாகவே இருக்கு
பிணக்கைப் போக்கவே நேர
போதவில்லையே! அவரெங்கே
கவனிக்கப் போகிறார் இப்ப
தாபத்துக்குரியதர்களின் பட்
டினி விரதத்தை!

* * *

உண்ணாநோன்பு, ஆயுத
தாங்காமல் புரியும் கொலை
தொழில் ஆகும். அது த
கொலை முயற்சி கிணற்றி
விழுந்தோ, தூக்கிட்டு
கொண்டோ, நம்பிக்கை இழந்
பின் தற்கொலை செய்துகொள்ள
எடுத்துக் கொள்ளும் முயற்சி
கும் பட்டினி இருந்து சாக
துணியும் முயற்சிக்கும் துளியு
வேற்றுமை கிடையாது. இரண்
டும் தற்கொலை இனத்தை
சேர்ந்தவைதான். தற்கொலை
செய்துகொள்ள முயல்கிறவ
களை, சட்டம் பேசித் தண்டி
பதைப்போலவே, கொழுத்து
போய் உண்ணாவிரதம் ஏற்பவ
ரையும் சட்டத்தின்படி தண்
டிக்கவேண்டும். இந்த நிலை ஏ
பட்டால்தான், உண்ணாவிர
உபத்திரவம் ஒருவாறு மறை
ந்து ஒழிய இடமேற்படும்.

தி. மு. கழகம் முத்தியால்
பேட்டைக் கிளையின் செயற்கு
உறுப்பினர் தோழர் ஆ. கு. ச
பந்தம் அவர்களின் முதல் ம
னுக்கு 16-9-51 அன்று பன்னீ
செல்வம் என்று பெயரிட
பட்டது.

இயக்கப் பாடகர் சென்னை
இரா. சண்முகம் அவர்களின்
தமக்கை தோழியர் அனுசூ
20-9-51 அன்று ஓர் ஆண் குழ
தைக்குத் தாயானார். குழந்தைக்கு
மணிவண்ணன் எனப் பெயரிட
பட்டது.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printer
147, Coral Merchant St., Madras, Joint-Editor 'M. Ilancheliyan B.A. (Hons)